செ.வெ.எண். 22/செப்டம்பர் தேதி : 07.09.2016

# பத்திரிக்கை செய்தி

## உள்ளாட்சி தேர்தல் - 2016 வரைவு வாக்குச் சாவடி பட்டியலை தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டார்.





தருமபுரி மாவட்டத்தில் மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள், வட்டார ஊராட்சி உறுப்பினர்கள், சிற்றூராட்சி உறுப்பினர்கள் மற்றும் சிற்றூராட்சி தலைவர் ஆகிய பதவிகளுக்கான தேர்தல் நடைபெற உள்ளது. அதே போன்று நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் பேரூராட்சி உறுப்பினர்கள் ஆகிய பதவி இடங்களுக்கும் தேர்தல் நடைபெற உள்ளது. இத்தேர்தலுக்கான வரைவு வாக்குச் சாவடிகளின் விவரப்பட்டியல் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்களால் இன்று (07.09.2016) வெளியிடப்பட்டது. இப்பட்டியல்கள் மாவட்ட ஊராட்சி அலுவலகம், ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் சிற்றூராட்சி அலுவலகங்கள் ஆகிய இடங்களில் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் தருமபுரி நகராட்சி வார்டு உறுப்பினர்கள் மற்றும் பேரூராட்சிகளின் வார்டு உறுப்பினர்கள் தேர்தலுக்கான வரைவு வாக்குச் சாவடிகளின் விவரப் பட்டியல்கள் சம்மந்தப்பட்ட அலுவலகங்களில் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் சம்மந்தப்பட்ட வாக்குச்சாவடி மையங்களிலும் பொதுமக்களின் தகவலுக்காக வெளியிடப்படுகிறது. பொது மக்களோ தேர்தலில் போட்டியிட விரும்பும் வேட்பாளர்களோ அல்லது அரசியல் கட்சிகளின் மாவட்ட பிரதிநிதிகளோ இது தொடர்பாக தங்களது கருத்துகளை அல்லது மறுப்புகளை மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் 12.09.2016-றகுள் தெரிவிக்கலாம் என தருமபுரி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. ஸ்ரீதர், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருமதி. ஆர்த்தி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) திருமதி. எல். சித்ரா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்கள்) திரு. சரவணன், பேரூராட்சிகள் உதவி இயக்குநர் திருமதி. மரிய எல்சி, நகராட்சி ஆணையர் (பொ) திரு. குணாளன், பொறியாளர் திரு. கிருஷ்ணகுமார், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் பேரூராட்சி செயல் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.